# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 129/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.2** |
| Name | : | **கிருஷ்ணன்** |
| Father's / Husband Name | : | **ராமலிங்கம்** |
| Address | : | **லாடபுரம்** |
| Age | : | 53/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் என்னுடைய ஊரை சேர்ந்தவர். கடந்த 18.06.2024 அன்று நான் பெரம்பலூர் காவல் நிலையத்திற்குகு எதிரில் உள்ள பூ கடையில் இருந்தபோது பகல் சுமார் 3.30 மணி அளவில் எங்கள் ஊரை சேர்ந்த பழனிவேல் என்னிடம் வந்து லோன் வாங்குவதற்காக HDFC வங்கிக்கு தனது இருசக்கர வாகனத்தில் சென்று வாகனத்தை வங்கியின் முன்புறம் நிறுத்திவிட்டு வங்கிக்கு சென்று அரை மணி நேரம் கழித்து திரும்பி வந்து பார்த்தபோது காணவில்லை என்று என்னிடம் சொன்னார். இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 46 T 8732 ஆகும். நானும், பழனிவேலும் சேர்ந்து இருசக்கர வாகனத்தை பெரம்பலூரில் தேடிபார்த்தோம் கிடைக்கவில்லை. அதன்பிறகு 09.07.2024ம் தேதி அன்று பழனிவேல் பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் கொடுக்கும்போது நான் அவருடன் சென்றிருந்தேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வண்டி காணாமல் போன அன்று பழனிவேல் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. வண்டி காணாமல் போனதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், அ.சா. 1 சொல்லி தெரியும் என்றாலும் சரிதான். புகார் கொடுக்க வந்தபோது பழனிவேல் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். மேற்படி விவரத்தை போலீஸார் விசாரித்தபோது நான் சொன்னேன் என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.